1970 மார்ச் 24] [திரு. சு. துரைசாமி]

நடந்துக்கொண்டதாக அறநிலையத் துறையினருக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைப் பற்றி ஏதாவது சொல்லியிருந்தால் அதற்கு விளக்கம் கொடுக்கலாம். மற்றவர் களைப் பற்றிச் சொன்னால், அவர்களை டிஃபெண்டு பண்ணுவதற்கு இலாகா இருக்கிறது. அமைச்சர் இருக்கிறார். பி. ப.

திரு. சு. துரைசாமி: நான் சொல்லித் தான் மாற்றியதாக அங்கத்தினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் இந்த மன்றத்திலே 12–30

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தலைவர் அவர்களே, ஒரு ஈ.ஓ. க்கு இவ்வளவு பெரிய விவகாரம் வந்திருப்பது வேண்டிய தில்லை. சாதாரணமான அதிகாரியைப் பற்றிப் பேசத் தேவை யில்லை என்ற காரணத்திற்காகத்தான், ஈ.ஓ. பற்றி அதிகமாகப் பேசாமல், நிர்வாக வசதிக்காக மாற்றப்பட்டார் என்று தெரிவித் தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிப் பேசுவது அந்த ஈ.ஓ. அவர்களுக்கே கெடுதல் ஏற்படும் என்று நினைக்காமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கே இது சாதகம் இல்லை, நிர்வாக வசதிக்காக என்று சொல்லிவிட்ட பிறகு அதில் தலையிட யாருக்கும் உரிமை இருக்கிறதா என்பது சந்தேகம் தான். அதிகாரிகளை மாற்றுவது, போடுவது இதிலெல்லாம் தலையிடுவது நல்லதல்ல. ஆகவே, இந்த விவகாரத்தை இந்த அளவோடு நிறுத்திக் கொண்டால் நல்லது என்று தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன்னுள்ள கேள்வி:— "நிதிக் கோரிக்கை எண். 9-எ 1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 40,83,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழகப்பட்டது.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 21—சின்கோனா.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, ஆளுநர் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழி கிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 21—சின்கோனா* என்ற தலைப்பின் கீழ் ரூ. 55,59,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

---

* சின்கோனாத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு நான்காவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss policy, I move the motion standing in name, namely—

"That the allotment of Rs. 55,59,600 under Demand No. 21—Cinchona—be reduced by Rs. 100".

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss policy I move the cut motion standing in my name, namely—

"That the allotment of Rs. 55,59,600 under Demand No. 21—Cinchona—be reduced by Rs. 100."

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, சின்கோனா உற்பத்தி செய்தும் கூட, தனியாரிடம் இருந்து சின்கோனா மரப் பட்டை வாங்க வேண்டிய நிலையைப் போக்க, இன்னும் பல மலைப் பிரதேசங்களில் வளர்ப்பு திட்டத்தை விஸ்தரிப்பது குறித்து விவாதிக்க, "நிதிக் கோரிக்கை எண். 21—சின்கோனா—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 55, 59,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, அந்நிய நாட்டுச் செலவாணி பெற்றுத்தரும் இந்த இலாகாவிற்கு மேலும் அதிகப்படியான பணம் ஒதுக்கும் அவசியத்தைப் பற்றி விவாதிக்க, "நிதிக் கோரிக்கை எண். 21—சின்கோனா—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கபடுகின்ற ரூ. 55,59,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

(இ) நிதிக் கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண். 35—காட்டுவளத் துறை—என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,98,21, 100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss policy, I move the cut motion standing in my name, namely—

"That the allotment of Rs. 1,98,21,100 under Demand No. 35—Forest Department—be reduced by Rs. 100."

DR. H. V. HANDE : Sir, discuss policy, I move the cut motion standing in my name, namely :—

"That the allotment of Rs. 1,98,21,100 under Demand No 35—Forest Department—be reduced by Rs. 100."

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, ஏழை மக்கள் காட்டில் சிறு சுள்ளிகள் பொறுக்கி அதை விற்றுப் பிழைப்பவர் களுக்கு, அரசாங்கம் வசூலிக்கும் கட்டணத்தை எடுத்து விடாதது

---

* காடுகள் துறை பற்றிய கொள்கை விளக்க குறிப்பு ஐந்தாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.